Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 59 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.7**

Defence

Court

| | |
|---|---|
| Name | ஆனந்தன் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 4th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 4th day of November 2025.**

2 வது எதிரி இறந்து விட்ட காரணத்தினால் குற்றம் அற்று விட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

நான் பண்ருட்டி, திருவதிகையில் வசிக்கிறேன். தரணி என்பவர் ஞானவேலின் அக்கா ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் பெயர் தெரியாது. சந்தாகுமாரின் உறவுக்காரர் சக்திவேல் ஆகும். தரணி சம்பந்தமாக தரணி குடும்பத்திற்கும் சக்திவேல் குடும்பத்திற்கும் தகராறு என எனக்கு தெரியும். சாந்தகுமார் சக்திவேலுக்கு ஆதரவாக இருந்தார். அதன்பிறகு சாந்தகுமார் இறந்து விட்டதாக நான் வேலையில் இருந்து வந்துக்கொண்டிருந்த போது போன் வந்தததது. மறுநாள் கடலூர் அரசு மருத்துவமனையில் சாந்தகுமாரின் தம்பி கார்த்தி என்பவரை பார்த்தேன். கார்த்தியின் முதுகில் சம்பவத்தில் தாக்கப்பட்டு பின்பக்கம் வலி இருந்ததாக சொன்னதால் அவரை மருத்துவமனையில் ஊசி போட அழைத்து சென்று அனுப்பி வைத்தேன். கார்த்தியிடம் என்ன விவரம் என்று கேட்டபோது கார்த்தி சாந்தகுமாருடன் இருந்ததாகவும் அப்போது அவருக்கு அடிப்பட்டு வலி இருந்ததாக என்னிடம் கூறினார். வேறு எதுவும் எனக்கு இந்த வழக்கு பற்றி தெரியாது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி ஆவணங்கள் பரீசிலிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை:**

கடந்த வெள்ளிக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு பண்ருட்டி திருவதிவையில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்காக சென்று இருந்தேன் என்றால் சரியல்ல.

அவ்வாறு நான் சென்று இருந்த போது எதிரிகள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தார்கள் என்றாலும் சாந்தகுமாரை இனி மேல் விடக்

கூடாது அவனை போட்டு விட வேண்டும் என சொல்லிக்கொண்டு இருந்தார்கள் என்றால் சரியல்ல.

நான் அருகில் வந்ததகை பார்த்து அவர்கள் பேசுவதை நிறுத்தி விட்டார்கள் என்றால் சரியல்ல.

05.09.2020 மாலை 6.45 மணிக்கு சாந்தகுமாரும் அவரது தம்பி கார்த்தி என்பவரும் பேருந்து நிறுத்தம் அருகே நின்று இருந்த போது எதிரிகள் ஆறு பேரும் சாந்தகுமாரை இரும்பு பைப்பால் மற்றும் கத்தியால் தாக்கி சாந்தகுமாரை கொலை செய்து விட்டதாக கேள்விப்பட்டேன் என்றால் சரிதான்.

போலிசார் விசாரணையில் எதிரிகள் ஒன்றாக சேர்ந்து சதி திட்டம் தீட்டியது குறித்து சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:-**

கார்த்தி அடிப்பட்டு மருத்துவமணைக்கு அவரை சிகிச்சைக்கு அழைத்து சென்றதாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*
*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore*